**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 383 | of | 2023 |

**2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 29-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **ரங்கநாதன்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-29.07.2026**

**வா.சா.-1**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

ஊரில் எங்களுக்கு நிலம் உள்ளது. பிரதிவாதி மோகன் அதே ஊரை சேர்ந்தவர் என்பதால் பழக்கம். சுமார் 12 ஆண்டுகளாக பிரதிவாதி எனக்கு பழக்கம். 2014 செப்டம்பரில் பிரதிவாதி என்னை வந்து பார்த்து குடும்ப செலவிற்காக ரூ.5 லட்சம் வாங்கியதை வழக்கில் சொல்லியிருக்கிறேன். பிரதிவாதிக்கு அந்த ஊரில் நிலம் உள்ளது. அந்த நிலத்தை வட்டிக்கு ஈடாக பயிரிடுகிறேன் என்று நான் பிரதிவாதியிடம் கேட்டேன் என்றால் சரியல்ல. வட்டிக்காக பிரதிவாதி அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 simple mortgage என்றாலும் அது

உண்மையில் சுவாதீன அடமானம் என்றால் சரியல்ல. ஆண்டுக்கு 24% வட்டி வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்ப செலவிற்கு அது அதிகபடியானது என்றும் 9% மட்டுமே விதிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அடமானம் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றும், சுவாதீனத்தை ஒப்படைக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுவாதீனம் என்னிடம்தான் உள்ளது என்றும், எனவே பிரதவாதி வட்டி தர வேண்டியதில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அடமான பத்திரத்தில் உள்ள சொத்து நன்செய் நிலம் என்றால் சரிதான். 2 போகம் விளையக் கூடியது என்றால் சரிதான். பிரதிவாதி அசல் தொகை ரூ. 5 லட்சம் திருப்பி தர தயாராக இருக்கிறார்என்றால்சரியல்ல. நான்தான் பெற்று கொள்ள மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. வழக்கில் இறுதி நிலை தீர்ப்பாணை கோர இயலாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை -இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu